بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 18.07.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 18, July 2014 (Tamil)

## கருணையுள்ள மற்றும் மன்னிக்கக்கூடிய இறைவன்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா அஸ்ஸுமர்–ன் 54, 55 ஆகிய வசனங்களை ஓதி அதன் பொருளையும் கூறினார்கள்:–

قُلْ يَٰعِبَادِىَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ يَغْفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ

وَأَنِيبُوٓا۟ إِلَىٰ رَبِّكُمْ وَأَسْلِمُوا۟ لَهُۥ مِن قَبْلِ أَن يَأْتِيَكُمُ ٱلْعَذَابُ ثُمَّ لَا تُنصَرُونَ

பொருள் : நீர் கூறுவீராக: தமக்கே (பாவஞ் செய்து) அநீதி இழைத்துக் கொண்ட என் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்து விட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பாவங்களையும் மன்னிக்கிறான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டக்கூடியவனும் ஆவான்.

மேலும் நீங்கள் உங்கள் இறைவன் பால் திரும்பி விடுங்கள். உங்களிடம் தண்டனை வருவதற்கு முன்னர், நீங்கள் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து விடுங்கள். (ஏனென்றால்) அதன் பின்னர் (எவராலும்) நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள். (39:54,55)

திருக்குர்ஆனில் அல்லாஹ் பல்வேறு வசனங்களில் பல்வேறு கருத்துக்கள் மூலமாக பல்வேறுபட்ட அடியார்களுக்கு அவன் அதிகமாக மன்னிக்கக் கூடியவனாவான். மேலும் அவன் தன் அடியார்களின் மீது அதிகமாக கருணை காட்டக்கூடியவனாவான் என்று நம்பிக்கையூட்டியுள்ளான்.

நான் ஓதிய வசனங்களின் முதல் வசனத்திலும் இதே கருத்து தான் கூறப்பட்டுள்ளது. மேலும் பாவங்களின் காரணமாக அல்லாஹ்வின் தண்டனைக்கு பயந்து கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்கும் அல்லாஹ்வின் கருணை மற்றும் மன்னிப்பிலிருந்து அருள் பெறுவதற்கான அழகான தூதுச் செய்தி உள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான் : என் அடியார்களே ! எனது கருணையிலிருந்து அவநம்பிக்கை அடைந்து விட வேண்டாம். நான் எஜமானனாவேன். நான் உங்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கும் மேலும் உங்களை எனது அருளின் போர்வையில் மூடுவதற்கும் ஆற்றல் உடையவனாவேன். ஆக, இது நம்பிக்கையை அதிகரிக்கக்கூடிய மேலும் அவநம்பிக்கையை போக்கக்கூடிய எவ்வளவு அழகான தூதுச் செய்தியாகும். இந்த தூதுச் செய்தி அவநம்பிக்கை அடைவது பாவமாகும் என மனிதனுக்கு கூறுகிறது. இந்த தூதுச் செய்தியே நம்மை பலவீனங்களிலிருந்து காப்பாற்றுவதன் பக்கம் இட்டுச் செல்லக்கூடியதும், வாழ்வின் தோல்விகளிலிருந்து தூரம் எடுத்துச் செல்லக்கூடியதாகும். ஏனென்றால், சில சமயங்களில் அவநம்பிக்கைகளே பாவங்கள் செய்வதற்கும் மேலும் வாழ்வின் தோல்விகளுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. ஆனால் எவர் அல்லாஹ்வின் கருணையின் கீழ் வந்து விடுவாரோ அவநம்பிக்கைகளும், தோல்விகளும் அவரிடமிருந்து தொலைவில் ஓடி விடுகின்றன. இந்த தூதுச் செய்தியே நம்மை அல்லாஹ்வின் கட்டளைகளின் படி நடப்பதற்கும் மேலும் அவனோடு

அன்பு செலுத்துவதற்கான வழிகளை காட்டுகிறது. அதன் மூலம் நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாக ஆகி அவனுடைய அருள்களிலிருந்து பலன் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆக, இத்தூதுச் செய்தி வழிதவறிய அனைவருக்குமுரிய ஒளிமயமான வழியாகும். இத்தூதுச் செய்தி ஆன்மீக மரணமடைந்த அனைவருக்கும் வாழ்விற்கான தூதுச் செய்தியாகும். இத்தூதுச் செய்தி ஷய்த்தானின் கையில் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சுதந்திரத்திற்கான நற்செய்தியாகும். நம்மீது தன் அன்பின் பார்வையை எந்த அளவுக்கு செலுத்துகிறான் என்றால் மீண்டும் மீண்டும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு கூறுகின்றான். **வலா தயிசு மிர்ரூஹில்லாஹ்** மேலும் அல்லாஹ்வின் கருணையிலிருந்து அவநம்பிக்கை அடைந்து விட வேண்டாம். ஏனென்றால் **லா யயீசு மிர் ரூஹில்லாஹில் கவ்மில் காஃபிரீன்** – அதாவது நிராகரிப்பவர்களைத் தவிர வேறு எவரும் அல்லாஹ்வின் கருணையிலிருந்து அவநம்பிக்கை அடைவதில்லை.

ஆக, ஈமான் கொண்டிருப்பதாக வாதிக்கின்றீர்கள் என்றால் அல்லாஹ்வின் கருணை மற்றும் மன்னிப்பின் மீது எப்போதும் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய மனித பலவீனங்களின் காரணமாக ஒரு சில தீமைகளில் வீழ்ந்து விட்டீர்கள். ஆனால் நீங்கள் வழிதவறியவர்களைச் சேர்ந்தவர்களல்ல. வழிதவறியவர்கள் மட்டுமே அல்லாஹ்வின் கருணையிலிருந்து அவநம்பிக்கை அடைகின்றனர். அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இல்லை. அல்லாஹ்வின் கருணையின் மீது நம்பிக்கை இல்லை. இந்த அவநம்பிக்கை வழிதவறியவர்களுக்கே உரியதாகும். அல்லாஹ் கூறுகின்றான். **வமய் யக்னது மிர் ரஹ்மதி ரப்பிஹி இல்லல் லாழ்லூன்** – அதாவது வழிதவறியவர்களைத் தவிர தனது இறைவனின் கருணையிலிருந்து அவநம்பிக்கை அடையக் கூடியவர் யார் ? ஆக, நிச்சயமாக குழம்பிய நிலையில் உள்ளவர்களுக்கும் மேலும் தன்னுடைய நிலைமைகளின் காரணமாக நிம்மதி இழந்தவர்களுக்கும் அனுதாபத்திற்கும், மன நிம்மதிக்குமுரிய தூதுச் செய்தி இதை விட சிறந்தது வேறு என்ன இருக்க முடியும். பிறகு நமது இறைவன் நம்முடைய நிம்மதிக்காக, அவன் உங்களுடைய தீய செயல்களின் காரணமாக உங்களை உடனடியாக பிடித்து தண்டனை கொடுப்பதில்லை என்றும் கூறுகின்றான். மாறாக, **வரப்புகல் ஃகபூரு ஸுர் ரஹ்மா** – அதவாது உங்களுடைய இறைவன் அதிகமாக மன்னிக்கக் கூடியவன். மேலும் அதிகமாக கருணை காட்டக் கூடியவனும் ஆவான். ஏனென்றால் **கதப ரப்புகும் அலா நஃப்ஸிஹிர் ரஹ்மா** – அதாவது உங்களுடைய இறைவன் உங்கள் மீது கருணை காட்டுவதை தன்மீது கடமையாக்கியுள்ளான்.

கடந்த நாட்களில் டென்மார்க்கின் ஒரு மார்க்க பத்திரிகையில் ஒரு பெண்மணி திருக்குர்ஆன் தொடர்பாக இதில் மீண்டும் மீண்டும் தண்டனை மற்றும் ஆக்கினை பற்றி கூறப்பட்டுள்ளது. மேலும் அன்பின் வார்த்தை எங்குமே உபயோகிக்கப்படவில்லை, ஓரிரு இடத்தில் மட்டுமே வந்துள்ளது என எழுதியுள்ளார். மேலும் இறைவன் மீது நம்பிக்கை ஒரு மனிதனின் சுய விருப்பத்தினாலோ, சுதந்திரமாகவோ அல்லது இறைவன் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாகவோ ஆகும் என்று கூறுவது சரியாகாது. குறைந்த பட்சம் முஸ்லிம்களுக்கு அது சரியல்ல. ஒரு சில வசனங்களை முன்பின் இல்லாமல் எழுதியோ அல்லது தவறான முறையில் கூறி தன் தரப்பிலிருந்து விளக்கமளித்து இஸ்லாத்தின் இறைவனை தண்டனை அளிப்பதில் விரைபவனாகவும், கடுமையான முறையில் பிடிப்பவனாகவும் நிரூபிப்பதற்கு முயற்சி செய்துள்ளார். எவ்வாறிருப்பினும் அங்குள்ள ஜமாஅத் இதற்கு பதில் கூறிக் கொண்டிருக்கின்றது. ஆனால் நான் எடுத்து வைத்த ஒரு சில ஆதாரங்கள் எங்கு நம்பிக்கையாளர்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய தூதுச் செய்தியை வழங்குகின்றதோ அதே சமயம் இஸ்லாத்தின் மீது பொய்யை புனைந்துரைக்கக்கூடிய இது போன்ற கட்டுரையாளர்களுக்கும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கும், மேலும் திருக்குர்ஆனின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ளவர்களுக்கும் பதிலளித்து விடுகின்றன. அல்லாஹ் எஜமானனாவான். மன்னிக்கிறான். இது எப்படிப்பட்ட பண்பு என்றால் அனைத்து பண்புகளை விட மேலோங்கி இருக்கின்றது. மன்னிக்கவும் செய்கின்றான். கருணையும் காட்டுகின்றான். மனிதர்களிடம் எண்ணற்ற நேர்மையின்மையும், அநீதிகளும் இருந்தும் அவர்களுக்கு தண்டனை அளிப்பதில் விரைவாக செயல்படாததும் அவனின் கருணையாகும். ஆம்! நிச்சயமாக அநீதிகளிலும் மேலும் அளவுக்கு அதிகமாக வரம்பு மீறி பாவங்களில்

விழுவதின் காரணமாக பிறகு அந்த பிடிவாதத்தில் நிலைத்திருப்பதின் காரணமாக அல்லாஹ் கூறுகின்றான், உங்களுக்கு தண்டனை கிடைக்கும். தொடர்ந்து பாவங்களும், அநீதிகளும் செய்து கொண்டிருந்தால் மேலும் அதிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை என்றால் தண்டனை கிடைக்கும். இது இயற்கையின் சட்டமாகும். மாறாக, உலகத்தினுடைய சட்டமுமேயாகும். ஆனால் பிறகும் கூட அல்லாஹ் எந்த அளவுக்கு கருணையாளன் என்றால் ஒரு நேரம் வரும். அப்போது நரகம் காலியாகி விடும்.

அல்லாஹ்வினுடைய கருணை இவ்வாறு பரந்ததும், முடிவற்றதும் ஆகும். இந்த வசனங்களில் அல்லாஹ் தனது கருணை மற்றும் மன்னிப்பு பற்றி கூறிய பிறகு கூறினான். நீங்கள் என்னுடைய கருணை மற்றும் மன்னிப்பிலிருந்து பலன் பெறவில்லை என்றால் உங்களுக்கு பாவங்கள் மற்றும் அநீதிக்கான தண்டனை கிடைக்கும். ஆனால் இதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏதேனும் தண்டனை உங்களை சூழ்வதற்கு முன் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்ற என்னுடைய கருணையே உங்களை மீண்டும் மீண்டும் கவனமூட்டுகின்றது. வரம்பு மீறி அநீதி இழைப்பதன் காரணமாக நீங்கள் என்னுடைய பிடியில் வந்து விட வேண்டாம். ஆக, தப்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இப்போது இதிலும் ஆட்சேபனை செய்யக்கூடியவர்களை அவர்களுடைய அறிவு குருடாகி இருக்கிறது, மேலும் வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சி நிறைந்திருக்கிறது என்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூற இயலும் ? தங்களுடைய நாடுகளில் சட்ட இயற்றக்கூடியவர்கள் அதில் குற்றங்களுக்கு தண்டனை கொடுக்க விரும்புகின்றனர். ஆனால் அல்லாஹ்வினுடைய சட்டத்திற்கு புறம்பாக செயல்படுபவர்களுக்கு மேலும் கொடுமை மற்றும் அநீதியில் முன்னேறக் கூடியவர்கள் தொடர்பாக இறைவன் ஏன் நான் தண்டனை வழங்குவேன், ஆக்கினை வழங்குவேன் என்று கூறுவதாக கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய கண்ணியத்திற்குரிய, கம்பீரமான இறைவன் தொடர்பாக கூறினார்கள். அல்லாஹ் கூறுகிறான். ஆதமின் மக்களே! நீ என்னிடம் துஆ கேட்பதில்லை. மேலும் என் மீது நம்பிக்கையும் வைக்கிறாய். ஆக, நீ இணை வைக்க மாட்டாய் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நான் உனக்கு உன்னுடைய பாவங்களை மன்னித்து விடுவேன். உன்னுடைய பாவங்கள் பூமிக்கு சமமாக இருந்தாலும் சரியே. நான் தன்னுடைய பூமி முழுவதும் உன்னை மன்னிப்புடன் சந்திப்பேன். மேலும் நீ வானத்தின் எல்லை வரை தவறுகள் செய்திருந்தாலும் பிறகு நீ என்னிடம் மன்னிப்பு கேட்டால் நான் உனக்கு அதையும் மன்னித்து விடுவேன். மேலும் நான் அதை சற்றும் பொருட்படுத்த மாட்டேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். இது தான் அல்லாஹ். இஸ்லாத்தின் இறைவன். அவன் மன்னிக்கக் கூடியவனாவான். ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதத்தில் அவனுடைய மன்னிப்பின் வாசல்கள் அதிகமாக திறப்பதும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் மீது செய்த மாபெரும் கருணையாகும். ரமலானில் அல்லாஹ்வினுடைய மன்னிப்பு மற்றும் கருணை தொடர்பாக ஒரு அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது.

நஸர் பின் ஷஃபான் அவர்கள் கூறுகிறார்கள். நான் அபூ ஸல்மா பின் அப்துர் ரஹ்மானிடம் உங்களுடைய தந்தையிடமிருந்து ரமலான் தொடர்பாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக நேரடியாக கேட்ட எதனையும் எனக்கு கூறுங்கள் என்று கூறினேன். அபூ ஸல்மா பின் அப்துர் ரஹ்மான் கூறினார்கள். ஆம்! என்னுடைய தந்தை என்னிடம் கூறினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ரமலானின் நோன்பு உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. மேலும் நான் உங்களுக்கு அதை நிலைநாட்டுவதை கடமையாக்குகிறேன். ஆக, எவர் ஈமானின் நிலைமையில் நற்கூலிக்கான எண்ணத்தோடு இதில் நோன்பு வைத்தால் எவ்வாறு அவனுடைய தாயார் அவனைப் பெற்றெடுத்தார்களோ அது போன்று அவன் பாவங்களிலிருந்து வெளியே வந்து விடுகின்றான். புதிதாக பிறந்த குழந்தையைப் போன்று ஆகி விடுகின்றான். ஆக, அறிவீனர்களுக்கு இஸ்லாத்தின் இறைவன் எவ்வாறு தென்படுகிறான் என்பது நமக்கு தேவையல்ல. நம்முடைய இறைவன் நமது தாய் தந்தையர்களை விட அதிகமாக நம்மை நேசிக்கக் கூடியவனாவான். நம்மை மன்னிக்கக் கூடியவனாவான். மேலும்

தன் அடியார்களின் பாவங்களை மன்னிப்பதற்காக நம் பக்கம் ஓடி வரக்கூடியவனாவான் என்பதையே நாம் அறிவோம்.

பிறகு ரமலான் தொடர்பாக இன்னொரு ஹதீஸ் உள்ளது. அதில் ரமலானின் அருள் பற்றி கூறப்பட்டுள்ளது. சல்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஃபானின் கடைசி நாள் எங்களைப் பார்த்து கூறினார்கள். மக்களே! ஒரு மாபெரும் அருளுக்குரிய மாதம் உங்கள் மீது நிழல் தர இருக்கிறது. அதில் எப்படிப்பட்ட ஓர் இரவு இருக்கிறது என்றால், அது ஆயிரம் மாதங்களை விட சிறந்ததாகும். அல்லாஹ் அதில் நோன்பு வைப்பதை கடமையாக்கியுள்ளான். மேலும் அதன் இரவுகளில் இறை வணக்கம் செய்வதை நஃபிலாக ஆக்கி இருக்கின்றான். **ஹுவ ஷஹரு அவ்வலஹு ரஹ்மதுன் வ அவ்ஸதஹு மக்ஃபிரத்துஹு வ ஆகிரஹு இத்கும் மினன் நார்** – அதாவது இது எப்படிப்பட்ட மாதம் என்றால் இதன் முதல் பத்து நாட்கள் கருணைக்குரியதாகும். மேலும் நடு பத்து நாட்கள் மன்னிப்பிற்குரியதாகும். மேலும் இறுதி பத்து நாட்கள் நரகத்திலிருந்து இரட்சிப்பு வழங்கக் கூடியதாகும். மேலும் எவராவது இதில் ஏதேனும் நோன்பாளிக்கு உணவளித்தால் அவருக்கு அல்லாஹ் தன்னிடமிருந்து எப்படிப்பட்ட பானத்தை அருந்தச் செய்வான் என்றால் அவன் சொர்க்கத்தில் நுழைவதற்கு முன்பு ஒருபோதும் அவனுக்கு தாகம் எடுக்காது. அதாவது ரமலானுடைய உரிமையை செலுத்தியவாறு நோன்பு வைக்கப்பட்டு, நஃபில்கள் நிறைவேற்றப்பட்டும் அல்லாஹ்வை வணங்கியும் வந்தால் இந்த மன்னிப்பு எப்படிப்பட்டதென்றால் கடந்த பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன. மேலும் இனி மேலும் பாவம் செய்யாத அளவுக்கு ஆற்றல் பிறக்கிறது.

ஆக, அல்லாஹ் ஒவ்வொரு அடியிலும் நம்மை சொர்க்கத்தில் எடுத்தச் செல்லக்கூடிய ஏற்பாட்டை செய்து வருகின்றான். இன்றைய நாட்களில் நாம் ரமலானை கடந்து கொண்டிருக்கின்றோம். மேலும் இரண்டாவது பத்து நாட்களும் முடியப் போகின்றன. மூன்றாவது பத்து ஆரம்பமாகப் போகின்றது. மேலும் இந்த பத்தில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் மற்றும் அடியானை இறைவனோடு நெருக்கமாக்கக்கூடிய காட்சியை காட்டக்கூடிய மற்றும் பார்க்கக்கூடிய மேலும் பார்ப்பதற்கு மிகப் பெரிய வழியாக இருக்கக்கூடிய லைலத்துல் கத்ர் இரவை கொண்டதன் அடிப்படையிலும் இந்த பத்து அருளுடையதாக இருக்கின்றது. ஆக, இந்த பத்தில் நாம் நம்முடைய துஆக்கள் மற்றும் இறை வணக்கங்களுக்கு குறிப்பான ஏற்பாட்டை செய்ய வேண்டியது அவசியமாகும். இதில் பெறக்கூடியவற்றை நம் வாழ்க்கையின் அங்கமாக்குவதற்கு குறிப்பான தேவை உள்ளது. ஆக, சந்தேகமின்றி அல்லாஹ்வின் கருணை பரந்ததாகும். சந்தேகமின்றி ரமலானில் நன்மைகளுக்கு பல மடங்கு நற்கூலி உள்ளது. சந்தேகமின்றி ரமலான் கருணை மற்றும் மன்னிப்பை பெறுவதற்கும் மேலும் நரகத்திலிருந்து தூரம் விலகுவதற்கும் வழியாக இருக்கிறது. ஆனால் எவர்கள் ஒரு பற்றுணர்வோடு இதை பெறுவதற்கு முயற்சி செய்வார்களோ அவர்களே இந்த விஷயங்களிலிருந்து நிரந்தர பலன் பெறக்கூடியவர்கள் ஆவார்கள். ஆக, நம்மில் எவர்கள் ரமலானை கருணை மற்றும் மன்னிப்பு பெறுவதற்கான மற்றும் நரகத்திலிருந்து இரட்சிப்பிற்கான வழியாக ஆக்கிக் கொள்வார்களோ மேலும் பலவீனங்களை நீக்கக்கூடியவர்களும் மேலும் எப்பொழுதும் பாவங்களிலிருந்து விலகியிருக்கக் கூடியவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். இந்த ரமலான் நம்மை எப்பொழுதும் தீமைகளிலிருந்து தூரம் எடுத்துக் செல்லக்கூடிய மைல் கல்லாக இருக்கட்டுமாக. மேலும் எப்பொழுதும் நன்மைகளின் பக்கம் எடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கட்டுமாக. இனி ஒருபோதும் நம்மை தீமைகளின் பக்கம் குனிய வைக்காத அளவிற்கு நம் உள்ளத்தில் தீமைகளின் மீது வெறுப்பு உண்டாகட்டுமாக. உண்மையான பாவமன்னிப்புக் கோருவதன் பக்கம் நமது கவனம் இருக்கட்டுமாக. மேலும் அல்லாஹ்வினுடைய நெருக்கத்தை பெற வழிவகையாக இருக்கக்கூடிய பாவ மன்னிப்புக் கோருவதாக இருக்கட்டுமாக. இந்த விஷயங்களை எவ்வாறு பெற இயலும் அல்லது எப்பொழுதும் பாவங்களிலிருந்து விலக்கக்கூடிய உண்மையான பாவமன்னிப்புக் கோருதல் எவ்வாறு இயலும் என்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

பாவமன்னிப்புக் கோருதல் உண்மையில் நல்லொழுக்கத்தைப் பெறுவதற்கு மிகப் பெரிய தூண்டுதலாகவும், உதவி அளிக்கக்கூடியதும் ஆகும். (உயர் நல்லொழுக்கம் மற்றும் உயர் நன்னடத்தைக்கு

சொந்தக்காரராக ஆக வேண்டும், இறைவனுக்கு நெருக்கமாக ஆக வேண்டும் என்றால் இது பாவமன்னிப்புக் கோருதலாலேயே ஆக முடியும். இதன் காரணமாகவே மனிதன் முன்னேறுகிறான். இதுவே உதவியாகவும் ஆகிறது. கூறினார்கள்.) மேலும் மனிதனை முழுமையாக ஆக்கி விடுகின்றது. இதையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது பாவமன்னிப் கோருதலில் மூன்று நிபந்தனைகள் உள்ளன. வெறும் பாவமன்னிப் கோருவதால் மட்டும் பாவ மன்னிப்பு கிடைத்து விடாது. தவ்பதுன் நுஸுஹ் என்று அழைக்கப்படுகின்ற உண்மையான பாவமன்னிப்புக் கோருதல் முழுமையடையாமல் இதை பெற முடியாது. நிபந்தனைகள் என்ன ? கூறினார்கள்.

இந்த மூன்று நிபந்தனைகளில் முதல் நிபந்தனையை அரபி மொழியில் இக்லாஃ என்று கூறுவார்கள். அதாவது தீய பழக்கங்களை தூண்டக்கூடிய தீய எண்ணத்தை நீக்குதல் ஆகும். எந்த எண்ணங்கள் தீய இன்பத்திற்கு காரணியாக கருதப்படுகின்றதோ அதை பிடிங்கி எறிதலாகும். இது முதல் நிபந்தனையாகும்.

இரண்டாவது நிபந்தனை வெட்கப்படுதல். அதாவது மனம் வருந்துதல் மற்றும் வெட்கத்தை வெளிப்படுத்துதல் ஆகும். ஒவ்வொரு மனிதனின் மனசாட்சியும் அவனுக்கு தீமையை பற்றி எச்சரிக்கக்கூடிய ஒரு ஆற்றலை தன்னுள் கொண்டுள்ளது. ஆனால் நற்பேறு இழந்த மனிதன் அதை வீணாக விட்டு விடுகின்றான். ஆக, பாவம் மற்றும் தீமை செய்ததற்கு மன வருத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். மேலும் இந்த இன்பங்கள் தற்காலிகமானதும், ஒரு சில நாட்களுக்கு உரியதுமாகும் என்றும் கருத வேண்டும். மேலும் ஒவ்வொரு முறையும் இந்த இன்பத்தில் குறைவு ஏற்பட்டுக் கொண்டே செல்கிறது, எதுவரை என்றால் வயது முதிர்வு வரும் போது இந்த ஆற்றல்கள் வீணாகி மேலும் பலவீனமாகி இறுதியில் இந்த அனைத்து உலக இன்பங்களையும் விட்டு விட வேண்டிவரும். ஆக, வாழ்நாளிலேயே இந்த அனைத்த இன்பங்களும் விலகிச் செல்லக்கூடியதாகவும் இருக்கின்ற போது இதை செய்வதால் என்ன கிடைக்கும் ? என்றும் சிந்திக்க வேண்டும். தவ்பாவின் பக்கம் குனியக்கூடிய அதாவது தீய எண்ணங்கள் மற்றும் வீணான கற்பனைகளை பிடிங்கி எறியும் எண்ணம் உருவாகி பாவமன்னிபுக் கோருவதன் பக்கம் திரும்புகின்ற மனிதன் மிகவும் நற்பாக்கியம் பெற்றவன் ஆவான். எப்போது இந்த அசுத்தம் மற்றும் தூய்மையின்மை நீங்கி விடுமோ பிறகு வெட்கப்பட வேண்டும். தான் செய்த தவறுக்கு வருந்த வேண்டும்.

மூன்றாவது நிபந்தனை உறுதி ஆகும். அதாவது இனிமேல் இந்த தீமைகளின் பக்கம் செல்ல மாட்டேன் என உறுதியான எண்ணம் கொள்வதாகும். மேலும் எப்போது அவன் அதில் நிலைத்து இருக்கிறானோ பிறகு இறைவன் அவனுக்கு உண்மையான பாவமன்னிப்புக் கோருவதற்கான நல்வாய்ப்பை வழங்கி விடுவான். எதுவரை என்றால் அந்த தீமைகள் அவனிடமிருந்து முற்றிலுமாக நீங்கி அழகான நன்நடத்தையும், நற்செயல்களும் அந்த இடத்தை பெற்று விடுகின்றன. இது நன்நடத்தையின் மீது வெற்றியாகும். இதில் ஆற்றலையும் சக்தியையும் வழங்குவது அல்லாஹ்வின் பணியாகும். ஏனென்றால் அவனே அனைத்து ஆற்றல்களுக்கும் சக்திகளுக்கும் எஜமானனாவான். எவ்வாறு அவன் கூறுகின்றான். **இன்னல் குவ்வத லில்லாஹி ஜமீஆ** – அதாவது அனைத்து ஆற்றல்களும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். மனிதன் பலவீனமானவன் ஆவான். **ஹுலிகல் இன்ஸான லயீஃபா** இதன் உண்மைத்துவம் ஆகும். ஆக இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெறுவதற்கு மேலே குறிப்பிட்ட மூன்று விஷயங்களையும் முழுமையாக்கி மனிதன் சோம்பேறித் தனத்தை விட்டுவிட்டு பற்றுணர்வுடன் இறைவனிடம் துஆ கேட்க வேண்டும். அல்லாஹ் தஆலா நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுவான்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தங்களது செயல்களை தூய்மையாக்குங்கள். மேலும் எப்பொழுதும் இறைவனை நினைவு கூறுங்கள். கவனக்குறைவாக இருக்காதீர்கள். எப்பொழுது ஓடக்கூடிய வேட்டை சற்று தளரும் போது அது வேட்டைக்காரனின் பிடியில் வந்து விடுகின்றதோ அது போன்றே இறைவனை நினைவு கூர்வதில் கவனக்குறைவாக இருக்கக்கூடியவன் ஷய்த்தானுக்கு வேட்டையாகி விடுகின்றான். பாவமன்னிப்புக் கோருதலை எப்போதும் உயிரோடு வையுங்கள். ஒருபோதும் மரணிக்க விடாதீர்கள். ஏனென்றால் எந்த உறுப்பினால் பணி செய்வோமோ அதுவே பயனளிக்க இயலும். மேலும் எதை வீணாக விட்டு விடுவோமோ பிறகு அது எப்போதும் ஒன்றுக்கும் ஆகாததாக

ஆகிவிடுகின்றது. இது போன்றே பாவமன்னிப்புக் கோருதலையும் அது வீணானதாக ஆகிவிடாத அளவிற்கு செய்து வாருங்கள். நீங்கள் உண்மையான பாவமன்னிப்புக் கோரவில்லை என்றால் அது கல்லில் போடப்படுகின்ற விதையைப் போன்றதாகும். மேலும் அது உண்மையான பாவமன்னிப்புக் கோருதல் என்றால் அது நல்ல பூமியில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றதாகும். மேலும் அது உரிய நேரத்தில் பழங்களைக் கொடுக்கின்றது. இன்றைய நாட்களில் இந்த பாவமன்னிப்புக் கோருதலில் மிகப்பெரும் பெரும் கஷ்டங்கள் உள்ளன. ஏனென்றால் உலகப் பேராசைகள், உலக இன்பங்கள் முன் நிற்கின்றன.

கூறினார்கள்: – இஸ்திஃபார், பாவமன்னிப்புக் கோருதல், மார்க்க அறிவை அறிந்து கொள்ளுதல், இறைவனின் மகத்துவத்தை கருத்தில் கொள்ளுதல் மேலும் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுதல் ஆகிய இவைகளே நாம் மேலோங்குதவற்கான ஆயுதமாகும். தொழுகை துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதின் சாவி ஆகும். தொழுகின்ற போது துஆ செய்யுங்கள். கவனக்குறைவாக இருந்து விடாதீர்கள். ஒவ்வொரு தீமையிலிருந்தும் விலகுங்கள். அது இறைவனுக்குரிய உரிமைகளாக இருந்தாலும் சரியே, மனிதனுக்குரிய உரிமையாக இருந்தாலும் சரியே.

அல்லாஹ் நம்மை உண்மையான பாவமன்னிப்புக் கோருபவர்களில் சேர்ப்பானாக. மேலும் எப்போதும் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வோமாக. ரமலானோடு தொடர்புடைய அனைத்து அருள்களையும் பெற்றுக் கொண்டே செல்லக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

ஹுஸுர் அவர்கள் கூறினார்கள். இப்போது நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு மூன்று ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா முஷ்தாக் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் நமது மதிப்பிற்குரிய இம்தியாஸ் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் நவாப் ஷாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஜுலை 14 அன்று ஷஹீதாக்கப்பட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّآ إِلَيْهِ رَاجِعُونَ மாலை 4.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத ஒரு சிலர் அவர்களின் கடையையும் மற்றும் அவர்களையும் சுட்டு ஷஹீதாக்கினார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّآ إِلَيْهِ رَاجِعُونَ விபரங்களின் அடிப்படையில் முஹம்மது இம்தியாஸ் அஹ்மது சாஹிப் நவாப் ஷா நகரத்தின் ட்ரன்ங் பஜார் பகுதியில் இருக்கின்ற தன்னுடைய கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார்கள். மோட்டார் சைக்கிளில் வந்த இரு அடையாளம் தெரியாதவர்கள் அவர்கள் மீது ஃபயரிங் செய்து விட்டு ஓடி விட்டார்கள். ஃபயரிங்கின் விளைவாக அவர்கள் மீது மூன்று குண்டுகள் பட்டன. இரு குண்டுகள் அவர்களின் தலையின் வலப் பக்கத்தில் பட்டு இடப்பக்கத்தின் காதுகளுக்கு கீழ் வழியாக வெளியேறிவிட்டன. மூன்றாவது குண்டு அவர்களின் கையில் பட்டது. எவ்வாறிருப்பினும் சந்தர்ப்ப இடத்திலே ஷஹாதத் நிகழ்ந்து விட்டது. إِنَّا لِلّٰهِ وَإِنَّآ إِلَيْهِ رَاجِعُونَ

இரண்டாவது ஜனாஸா வாழ்க்கையை அர்ப்பணித்திருந்த ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆசிரியராக பணியாற்றிய மதிப்பிக்குரிய நஸீர் அஹ்மது அன்ஜும் சாஹிப் அவர்களுடையதாகும். 1988 ஆம் ஆண்டு ஜாமிஆவிலிருந்து ஷாஹிப் பட்டம் பெற்ற பிறகு செயல் மைதானத்திற்கு வந்தார்கள். பல்வேறு ஜமாஅத்துகளில் இருந்துள்ளார்கள். 1990 ஆம் ஆண்டு மார்க்கங்களிடைய ஒப்பீடு பாடத்தில் கூடுதல் கல்வி பெறுவதற்காக ரப்வா அழைக்கப்பட்டார்கள். மேலும் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே அன்னார் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆசிரியராக படித்துக் கொடுக்க ஆரம்பித்தார்கள். மேலும் 18 ஜுலை 1999 ஆம் ஆண்டு முறையே அன்னார் மார்க்கங்களிடையே ஒப்பீடு பாட ஆசிரியராக நிரந்திரமாக நியமிக்கப்பட்டார்கள். மேலும் இறுதி மூச்சு வரை இந்த பொறுப்பை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றி வந்தார்கள். ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்ற பிறகு தொண்டாற்றிய காலம் ஏறக்குறைய 26 ஆண்டுகள் ஆகும். மார்க்கங்களிடைய ஒப்பிடுதலில் இளைய முபல்லிக்கள் மற்றும் பெரிய ஆலிம்கள் இருந்தும் அல்லாஹ்வின் அருளால் அன்னார் ஒரு அங்கீகாரமாக இருந்தார்கள். அதிகமான அறிவும் ஆழமான ஞானமும் இருந்தது. ஜாமிஆவில் படித்து கொடுப்பதைத் தவிர பல்வேறு துறைகளில் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியமும் அன்னாருக்கு கிடைத்தது. ஹஸ்ரத நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நியமித்த நீதித்துறையின் ஆரம்ப பிரதிநிதிகளில் ஒருவராக இருந்தார்கள். மேலும்

இறுதி வரை இருந்தார்கள். மஜ்லிஸே இஃப்தா மற்றும் Research Cell ன் உறுப்பினராகவும் இருந்தார்கள். பிறகு இவர்களுடைய ஒரு சிறப்பம்சம் இதுவாகவும் இருந்தது. அதாவது குடும்பத்தினர் கூறுகிறார்கள். ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக எந்தவொரு வி–யத்தையும் இவர்களால் சகித்துக் கொள்ள இயலாது. தன்னுடைய குழந்தைகளோடும் எவராவது ஏதேனும் பொறுப்பாளர்களுக்கு எதிராக பேசினால் அவர்களுக்கு புரிய வைப்பார்கள். மேலும் எவராவது ஜமாஅத்தினுடைய தீர்ப்பிர்க்கு எதிராகவே அல்லது கண்ணியத்திற்குரியவர்களுக்கு எதிராக பேச நினைத்தாலோ அவர்களுக்கும் மிகவும் நுட்பமான ஞானத்துடன் புரிய வைப்பார்கள். கிலாஃபத்தோடு அவர்களுக்கு அசாதாரனமான தொடர்பு மற்றும் அன்பு இருந்தது. உண்மையான உதவியாளர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்களுடைய மகள் கதீஜா மாஹிம் எழுதினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அளவு கடந்த அன்பு இருந்தது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்கள் படிப்பதை வலியுறுத்தி வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய புத்தகங்களுக்கு அகராதி எழுதி வந்தார்கள். மேலும் இந்த விலை மதிப்புள்ள கருவூலம் மக்கள் வரை சென்றடைய வேண்டுமே என்பதில் கவலையுடையவர்களாக இருந்தார்கள். ராஹே ஹுதா நிகழ்ச்சியிலும் மேலும் MTA வின் பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளார்கள். மிகவும் ஆதாரப்பூர்வ பதிலை கூறிவந்தார்கள். அல்லாஹ் இவர்களோடு கருணையோடு நடந்து கொள்வானாக. இவர்களுடைய படித்தரங்களை உயர்த்துவானாக. இது போன்ற அமல் செய்யக்கூடிய ஆலிம்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு இன்னும் வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா அன்வர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் உம்மே நாஸிர் ஆகியோருடைய மகன் ஆவார்கள். கடந்த திங்கட்கிழமை அன்று இவர்கள் வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ அன்னார் 1944 ஆம் ஆண்டு மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் விருப்பப்படி Agriculture College –ல் சேர்ந்தார்கள். மஸ்ஜிது முபாரக்கிற்கு முன்பக்கமிருந்த தாருஸ் ஸியாஃபத்தின் ஆரம்ப பூசப்படாத கட்டிடங்களினுடைய பொறுப்பை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) இவர்களுக்கு கொடுத்தார்கள். தற்போதைய தாருஸ் ஸியாஃபத்தின் ஆரம்ப கட்டுமானப் பணியும் இவர்களுடைய காலத்தில் தான் நடந்தது. 1982 – 83 ஆம் ஆண்டு வரை லங்கர் கானாவின் ஆஃபிஸராக தொண்டாற்றி வந்தார்கள். பிறகு நாயிப் நாஸிர் உமூரே ஆமாவாகவும் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது நிலங்களை கண்காணிக்கக்கூடிய பொறுப்பையும் இவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் மிர்ஸா ரஷீத் அஹ்மது சாஹிப் அவர்களுடைய மகள் சாஹிப் ஸாதி சபீஹா பேகம் சாஹிபாவோடு இவர்களுடைய திருமணம் நடந்தது. இவர்களுக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்கள் கலந்து கொண்ட தனது பேரன்களின் திருமணங்களில் இவர்களுடைய திருமணமே இறுதியானதாகும்.

கிலாஃபத்தோடு நல்ல தொடர்பு இருந்தது. மேலும் பலமுறை இங்கு போன் செய்து அந்த தொடர்பை வெளிப்படுத்தி வந்தார்கள். அல்லாஹ் இவர்களோடும் மன்னிப்பு மற்றும் கருணையோடு நடந்து கொள்வானாக. மேலும் இவர்களின் படித்தரங்களை உயர்த்துவானாக. இவர்களுடைய சந்ததிகளுக்கும் கிலாஃத்தோடு விசுவாசமான தொடர்பு வைக்கக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக. இவர்களுடைய மனைவியும் மிகவும் நோய்வாய் பட்டுள்ளார்கள். அல்லாஹ் இவர்களின் மீதும் கருணையும் அருளும் புரிவானாக.

Nazarath Nashr-o-Isha'ath, Qadian Translated By Moulavi. M.B. Tahir Ahmad